தினமலர்
22.06.2023

# ஜிப்மர் செவிலியர்களுக்கு மகப்பேறு பராமரிப்பு பயிலரங்கு

புதுச்சேரி, ஜூன் 22–

ஜிப்மர் செவிலியர் சேவைகள் துறை சார்பில் 'மரியாதைக்குரிய மகப்பேறு பராமரிப்பு' என்ற தலைப்பில் செவிலியர்களுக்கான ஒருநாள் மாநில பயிலரங்கம், செயல் திறன் பயிற்சி நிகழ்ச்சி நடந்தது.

செவிலியர் கண்காணிப்பாளர் சாந்திசண்முகம் வரவேற்றார். மருத்துவ கண்காணிப்பாளர் துரைராஜன் முன்னிலை வகித்தார்.



ஜிப்மர் செவிலியர் சேவைகள் துறை சார்பில் நடந்த ஒருநாள் பயிலரங்கில் மகப்பேறு பராமரிப்பு குறித்த கையேட்டை ஜிப்மர் பொறுப்பு இயக்குநர் கவுதம்ராய் வெளியிட்டார்.

ஜிப்மர் பொறுப்பு இயக்குநர் கவுதம்ராய் பயிலரங்கை துவக்கி வைத்து, 'மரியாதைக்குரிய மகப்பேறு பராமரிப்பு' குறித்த நிலையான வழிகாட்டுதல் கையேட்டை வெளியிட்டார். செவிலியர் கண்காணிப்பாளர் சாந்திதமிழ்மணி சிறப்புரையாற்றினார்.

தலைமை செவிலியர் சங்கரேஸ்வரி வாழ்த்தி பேசினார். கருத்தரங்கில் டாக்டர் தாசரி பாப்பா, துணை செவிலியர் கண்காணிப்பாளர் காந்திமதி, உதவி செவிலியர் செங்கமலர்செல்வி, விரிவுரையாளர்கள், செவிலியர்கள் கலந்து கொண்டனர்.

துணை செவிலிய கண்காணிப்பாளர் கண்ணகி நன்றி கூறினார்.